உபயோகமில்லாத எண்ணெய்களைச் சூட்டில் சிதைத்து ரப்பர் போன்ற பொருளாக்கலாம். பல எண்ணெய்களைக் கந்தகத்துடன் சூடு செய்ய ரப்பராகும். வெள்ளத்தில் வந்த வினைப்பூடு எங்கும் மண்டிக்கிடக்கிறது. அதிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் யாளி விதை எண்ணெயின் குணத்தை ஒட்டி இருக்கிறது; கந்தகத்துடன் பக்குவப்படுத்த ரப்பர் போன்ற பொருளாகிறது. பல எண்ணெய்களை ரசாயன முறையால் தாக்கித் தடிக்கச் செய்து செயற்கை நெய்யாக மாற்றுகிறார்கள். ஸோப், வர்ணப்பூச்சு, மசகுகள் முதலியவை தயாரிக்கவும் அவை பயன்படும்.

காடுகளில் அநேக நார்ப்பற்றுள்ள செடிகள் மண்டிக் கிடக்கின்றன. மெல்லிய நார்களாற் செய்யப்பட்ட ஆடைகளைத் தரிக்கக் குளுகுளுவென்றிருக்கும். தடிப்பு நார் கொண்டு கயிறு, படுதா, எந்திர மோட்டும் பட்டைக் கயிறு முதலியவற்றைத் தயாரிக்கலாம். அநேக நார்கள் காரஸோடா விலயனத்தில் பக்குவப்படுத்தப்பட மினுக்கங்கொள்ளும். வாழை நாரால் செய்யப்பட்ட சில ஆடைகள் பட்டைப்போலவே இருக்கின்றன.

உயர்தரக் காகிதங்கள், மூங்கில், சில விசேஷ புல்வகைகளிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. எந்த மரப்பொருளையும் வேண்டிய அளவில் தண்ணீர்விட்டு அரைத்து, உரிய ரஸாயன முறை கொண்டு தாக்க, வேண்டாத பொருள்கள் நீங்கி, ஸெலுலோஸ் கிடைக்கும். வயல்களில் விடப்பட்ட அடிக்கட்டைகளையும், சர்க்கரைக் கழிவையும் உபயோகித்து ஸெலுலோஸ் தயாரிக்கலாம். காகிதம், செயற்கைப்பட்டு, காகிதத் தோல்பத்திரம், வெடிபஞ்சு, புகையா வெடி, ஸெலுலாயிடு, பூச்சு முதலியவற்றைத் தயாரிப்பதில் ஸெலுலோஸ் தாய்ச் சரக்கு. ஸூசியானுவில் நெல் உமியிலிருந்து ஸெலுலோஸ் தயாரிக்கிறார்களாம்.

இன்னும் அழுகி அழிந்தோ, எரிந்தழிந்தோ வீணாகும் ஏராளமான புல் வகைகளை மழைக் காலத்தில் அறுத்துக் குழியில் போட்டு, காற்றுப் புகாவண்ணம் மண்ணால் மூடி 5, 6 மாதங்களுக்குப்பின் வெட்டி எடுத்து, ஆடுமாடுகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். 10 டன் புல்லைப் பக்குவப்படுத்த ரூ. 54/- செலவாகிற

தாம். இம்முறையை நம் குடியானவர்கள் அறியவேண்டியது அவசியம். வைக்கோல் புல் பஞ்சத்தை நீக்க இது ஒரு தக்க முறை.

காட்டிலிருந்து கிடைக்கும் அரக்கை ஒழுங்கான முறையில் கையாள லாபம் கிடைக்கும். வளையல், பூச்சு, முத்திரை அரக்கு, இசைத்தட்டு, மின்சார சாமான் முதலியவை தயாரிக்க அரக்கு ஒரு தாய்ச் சரக்கு.

எட்டி, ஊமத்தை, கசகசா, ஆடாதோடை போன்ற ஔஷத தங்களைக் கொடுக்கும் பல மரஞ்செடிகொடிகள் இருக்கின்றன. இத்துறையில் ஆராய்ச்சி செய்தால், நமது நாட்டிற்குப் போது மான எண்ணிறந்த மருந்துகளைத் தயாரிக்கலாம். பிற நாடுக ளுக்கும் அனுப்பலாகும். மருக்கொழுந்து, மாசிப்பச்சை வர்க்கத் தாவரத்தில் ஸான்டோனின் (Santonin) என்ற பூச்சி மருந்து கிடைக்கும். நரிவெங்காயத்தில் ஸெல்லாரின் என்ற ஹிருதய நோய்க்கு உதவும் மகா ஔஷதம் இருக்கிறதாம். நெல்லிக் கனி ஒரு பெரிய ரஸாயனம், காயகல்ப மருந்து. கறிகாய் அகப்ப டாத சமயத்தில் உலர்ந்த கனியைப் பொடி செய்து உபயோகிக்க லாம். கறிவேப்பிலையிலும், பச்சைக் கொத்தமல்லியிலும் வைட் டமின்கள் மண்டிக்கிடக்கின்றன. இவற்றை ஒழுங்கான முறை யில் நாம் வெகுநாளாக உபயோகித்து வருகிறோம்.

விளா, வில்வம் இவற்றில் அபூர்வ மருந்துகள் உள. முந்தி ரிக்கொட்டைத் தோலெண்ணெய் ஒரு மருந்து. உரிய ரஸாயன முறையால் அதைச் செயற்கைப் பிசினாக ஆக்கலாம். இனுப் பெண்ணெயைப் பக்குவப்படுத்தி நெய்க்குப் பதிலாக உபயோ கிக்கலாம். இனுப்பைப் பூவிலிருந்து சாராயமும் சாராயப் பொருள்களும் இறக்கப்படுகின்றன. மணிலாக் கொட்டையின் சிறப்புக் குணம் வரவர வெளியாகிறது. அதை இந்திய ஆலிவ் எண்ணெய் என்கலாம். பக்குவப்படுத்தி அதைச் செயற்கை நெய் யாக்கலாம். சூட்டிற் சிதைத்து எஞ்சின்களை ஓட்ட உபயோகிக் கலாம். அதன் தோலைப் பக்குவப்படுத்தி அதிலிருந்து கிடைக் கும் பர்பூரால் (Purfural) என்பதைக் கொண்டு ரப்பர் செய்ய லாம், பிசினுக்கலாம். அதைச் சுட்டு ஆக்கிய கரி வெடிமருந்

துச் சரக்குகளிலும் முகமூடியிலும் உபயோகிக்க ஏற்றது. விளக்கெண்ணெயைப் பக்குவப்படுத்தி என்ஜின்களுக்கு மசகாக்குகிறார்கள். டெய்சல் என்ஜின்களை ஓட்டவும் அது பயன்படுகிறது.

கருப்பஞ் சக்கையைத் தீ எரிப்பதற்கே உபயோகிக்கிறார்கள். அது உரமான நார்ப் பசையுள்ளதால், தடி அட்டைகள் செய்ய அது பயனாகிறது. அவ்வட்டைகள் கொண்டு அறைகளைத் தடுத்து சப்தம் ஓரறையிலிருந்து மற்றொன்றுக்குக் கேட்காதபடி செய்யலாம் ; பக்குவப்படுத்தி ஆடுமாடுகளுக்குத் தீனியாகக் கொடுக்கலாம். இலேசானதும் உறுதியுள்ளதும் தீயால் தாக்கப்படாததுமான கட்டடக் கல்களைத் தயாரிக்க அதை ஸெமண்டுடன் கலந்து வேலை செய்கிறார்கள். நெல் மெஷினில் கிடைக்கும் ஏராளமான தவிட்டிலிருந்தும் உமியிலிருந்தும் 'வைடமின் பி' (Vitamin B) உள்ள தைலம் இறக்கப்படுகிறது. இதை விசேஷ ஒளிக்கிரணங்களால் தாக்கி, 'வைடமின் டி' (Vitamin. D)யையும் விளைவிக்கலாகும். இக்காலத்து வைத்திய முறையில் வைடமின் கொண்ட மருந்துகள் ஏராளமாய் வழங்குகின்றன. உமிக்கரி ஒரு வலுவான அழுக்கு நீக்கி. உமிக்கரிப் பற்பொடியின் குணம் எல்லோரும் அறிந்ததே. ஸோடா உப்பு நீரில் பக்குவப்படுத்திய உமிக்கரி வெல்லத்தின் நிறத்தை நீக்கி வெண்சர்க்கரையாக்கும். கொட்டாங்கச்சிக் கரியின் குணவிசேஷ மகிமை நாளுக்கு நாள் விருத்தியாகிறது. முகமூடியிலுள்ள நாய்ச்சரக்கு அக்கரிதான். மக்களைக் கொடும் விஷவாயுவிலிருந்து தப்புவிக்கும் சாதனம் அதுவே. வாழை மரச் சாம்பலில் யவக்ஷாரம் அல்லது பொட்டாஷ் அதிகம். சண்டைக் காலங்களில் இதைப் பொட்டாஷ்-பொக்கிஷம் என்று கருத நேரிடும். காசிக்கட்டி மரத்திலிருந்து பழுப்புச் சாயமும், சாயவேர், மஞ்சிஷ்டி, மருதாணி இலை, அரக்குப்பிசின், சிவப்பு சந்தனக் கட்டை, நுணா,மஞ்சனத்தி, கல்யாண முருங்கைப்பூ முதலியவற்றிலிருந்து சிவப்புச் சாயமும், வர்த்தங்கி, கமலாப்பழம், என்பதிலிருந்து கிச்சிலிச் சாயமும், பலா வயிரத்திலிருந்து சந்நியாசிச் சிவப்பும், முருக்கம்பூ, மஞ்சள் கிழங்கு, குகும்பாப்பூ, மக்கிப்பட்டை, பவழ மல்லிகை, பரணவேர், தூணாப்பூ, ஆடாதோடை இலை முதலியவற்றிலிருந்து மஞ்

கள் சாயமும், அவுரியிலிருந்து நீலச் சாயமும், கடுக்காயிலிருந்து காகி, கறுப்புச் சாயங்களும் சுலபமாய் அடையக்கூடியவை. படிக்காரம், மயில்துத்தம், அன்னபேதி, எஞ்சமிச்சை, லோத்திரம், பால்கள்ளி, மாதுளை, புளி, தகர விதை இவற்றைச் சமயோசிதம்போல் சாயமிடுவதில் கார வஸ்துக்களாக உபயோகித்து நூல்களில் சாயத்தைக் கெட்டியாக ஏற்றலாம். மேற்கண்ட மரப்பொருள்களை உரிய அளவில் சேர்த்து ஆயிரக்கணக்கான வர்ணங்களை ஆடைகளுக்குக் கொடுக்கலாகும். இதைப் பற்றி அரசாங்கத்தார் தமிழில் ஒரு வெளியீட்டைப் பிரசுரித்துள்ளார். இன்னும் சோதனை செய்து பார்த்தால், வீணாகும் பல பூக்களும், காய்களும், கனிகளும், பட்டைகளும், வேர்களும், கட்டைகளும், இலைகளும் சாயங்களையும் வேறு பல உபயோகமுள்ள பொருள்களையும் தரும். காடு என்ன சொல்லுகிறது? காட்டை நம்பினோர் கைவிடப்படார்.

திருச்சி ரேடியோ நிலையத்திற் பேசிய பேச்சை ஒட்டி எழுதியது. அனுமதியுடன்.

நா. அனந்தவைத்யநாதன், எம். ஏ.

உதிர்ந்த மலர்கள்

1. உயர்ந்தெழு மரத்தி னின்று
உதிர்ந்துவீழ் மலர்காள் உம்மைப்
பயந்தவக் கிளைக ளோடே
பத்திரம் பிரிந்து தேம்ப
இயைந்தது எவ்வா றென்றே
இயம்புவீர்? இதுதான் நீவிர்
நயந்தவர் தமக்குச் செய்யும்
நட்பின துறுதி யாமே?

2. பூக்குமுன் பலபேர் அந்தப்
புன்றரு வழியே போந்தார்;
நோக்குதற் கிசைந்தா ரில்லை
நகரவோ மணமு மில்லை
ஆக்கமும் அழகும் எல்லாம்
அமைந்ததும் வரவா லன்றோ?
சீக்கிரம் நீவிர் இன்னே
சிதைந்துவீழ் தன்மை என்னே!

3. • வாழுநாள் வனப்பி னோடு
மகிழ்வினை எவர்க்கும் நல்கி
வீழுநாள் அரவ மின்றி
வீழ்ந்துறை விரைசால் பூவே!
மூளுமேத் துயரி னூடும்
முனிவர்கள் அமைதி காண்பார்;
ஆளுமத் திறனைப் பெற்றார்
அறிந்தனர் நமது செய்தி.

R. Mascarenhas.

இதற்கு என்செய்வது ?

சென்ற ஓர் ஆண்டாக நாம் இருவரும் பல விஷயங்களில் போட்டி இட்டிருக்கிறோமே, ஏன் இதற்கு நாம் கட்டுரை எழுதி அனுப்பக்கூடாது என்று சொல்லிக்கொண்டே சரோஜினி "கல்கி" யை எடுத்து அப்பொழுதுதான் வந்த தன் நண்பன் நாகரத்தினத்தின் முன்புள்ள ஒரு மேஜைமேல் வைத்தாள். அதில் "கல்கி" யின் ஆண்டுமலருக்கு மங்களகரமாக அல்லது துக்கமாக முடியும் சிறு கட்டுரைகள் வரவேற்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற நாகரத்தினமும் சரோஜினியின் வேண்டுகோள்படி ஒரு கதை எழுதியனுப்ப ஒப்புக்கொண்டான். ஆனால் எதைப் பற்றி எழுதுவது என்பதை ஒருவர்க்கொருவர் யோசிக்காமல் இருப்பவும் நாகரத்தினம் தன் வீடெய்தினான்.

மூன்று வாரங்கள் கழிந்தன. ஒருநாள் இவர்கள் வழக்கம் போல் "கூர்மா தமிழ் வாசகசாலை" யில் இருக்கும்போது, ஆங்குவந்த தபால் சேவகன் அவரவர்கள் விலாசத்துடனிருந்த இரண்டு "கல்கி" யைக் கொடுத்தான். அதில் நாகரத்தினம் "மாதர் உலகம்" என்ற புனைபெயருடன் எழுதி இருந்த கட்டுரை இதுதான்.

"முயன்றால் முடியாததில்லை"

முத்தையாலுபேட்டையிலுள்ள சர்தார் தெருவில் செல்வராஜ் என்னும் ஒரு வியாபாரி இருந்தார். அவருக்குக் குணசீலன் என்னும் மகன் ஒருவன் கண்டோர் மனதைக் கவரக்கூடிய அழகை உடையவனாய் இருந்தான். அவன் பி. எ. பரிக்ஷையில் முதன்மையாகத் தேறி ஏதாவது ஒரு நல்ல வேலைக்காகப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் ஒரு சமயம் தன் நண்பன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, அரியலூருக்கருகில்

இவன் சென்ற இரயில் கவிழ்ந்ததன் காரணமாகப் பல மக்களுக்குப் பலவித காயங்கள் ஏற்பட்டன. சிலருக்கு எலும்பும் முறிந்தது. அதில் அதிர்ஷ்டவசமாக ஒரு காயமுமின்றித் தப்பின தோழர் குணசீலன் கூடுமானவரை எல்லோருக்கும் "முதல் உதவி" செய்தான். அவ்வாறு ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டுவரும்போது அங்கு ஒரு பெண் காலில் ஒரு படுகாயத்துடன் கஷ்டப்பட்டிருப்பதைக் கண்டான். உடனே அதற்கு வேண்டிய சிகிச்சை மிகவும் கவனமாகச் செய்தான். பிறகு காயப்பட்டோர் பெயர்களை எல்லாம் எழுதிக்கொண்டு வரும்போது, அவளைக் கண்டு அவள் அழகில் சிறிது வியப்படைந்த குணசீலன், அப்பெண் பெயர் சாவித்திரி என்பதையும், அவள் தந்தை ஒரு குமாஸ்தாவென்பதையும் அறிந்தான்.

மாதங்கள் பல கழிந்தன. ஒருநாள் மாலை குணசீலன் தன் சொந்த ஊராகிய முத்தையாலுபேட்டையில் நடந்துகொண்டிருக்கும்போது, அழகிய தோற்றமுடைய ஒரு மங்கையைக் கண்டான். சில மாதங்களுக்கு முன் இரயில் விபத்தில் அவன் அவளுக்குச் செய்த உதவியும், அவள் பெயர் சாவித்திரி என்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தன. பிறகு விசாரித்ததில் அவள் தந்தை அவ்வூருக்கு மாற்றப்பட்டிருப்பதும் விளங்கிற்று. அன்றுமுதல் குணசீலனும், சாவித்திரியும் சிறந்த நண்பர்களானார்கள். இவளைப் பற்றி அவன் நினையாத நேரமும், அவனைப்பற்றி இவள் நினையாத நேரமும் இல்லை என்றே சொல்லவேண்டும். இவர்கள் நாளடைவில் காதலராக மாறினர்.

குணசீலனுக்கு அவ்வூர் பாங்கியிலேயே மாதம் எண்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது. குணசீலனுக்கு இப்பொழுது என்ன குறைவு? வீட்டிற்குவந்தால் தன்னைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள ஒரு மனைவி அவசியம் என்று அவனுக்குத் தோன்றவே, "முயன்றால் முடியாததில்லை" என்பதற்

கிணங்கத் தனக்குத் தகுந்த ஒருத்தியைத் தேடி மணந்துகொண்டான். அவள்தான் சாவித்திரி. பல கஷ்டங்களுக்குப் பிறகு அவன் அவளை அடைந்தான் ஆதலால், மணமும் மலரும்போலும், நகமும் சதையும்போலும் ஈருடலும் ஒருயிருமாய் வாழ்ந்தார்கள்.

"கல்கி" யின் மற்றொருபாகத்தில் சரோஜினி எழுதிய கட்டுரை "துக்கமயம்" என்ற புனைபெயருடன் இருந்தது கீழே தரப்பட்டுளது.

விதியை வெல்வது யார்?

கலியமலை என்னும் மூதூரிலே காதலர்களாக மாறின இருவர் இருந்தனர். இவர்கள் தனபாலனும், சுந்தரவல்லியுமாவர். சிறந்த காதலர்களுக்கு உதாரணம் காட்டவேண்டுமென்றால் இவர்களைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். உலகமே காதலில்தான் உள்ளது, கடமையைவிட காதலே சிறந்தது என்று நினைத்தவர்கள், ஒருவரை ஒருவர் மணக்கவும் திட்டம் வகுத்திருந்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு "விதியை வெல்வது யார்" என்பதற்கேற்ப இன்னல் நாட்கள் ஆரம்பமாயின.

சுந்தரவல்லி என்ன சொல்லியும் கேளாமல் அவள் பெற்றோர்கள் சென்னையிலுள்ள S இராஜகோபால் பி. எ., பி. எல்-க்கு அவளை மணம் முடிப்பதெனத் தீர்மானித்தார்கள். பெற்றோர் விருப்பத்திற்கு மாறாக நடக்க விரும்பாத சுந்தரவல்லியும் இணங்கி விட்டாள். தன் காதலன் தனபாலனுக்குக் கடைசிமுறையாக ஒரு கடிதத்தின் மூலம் இதைப்பற்றித் தெரிவித்துவிட்டாள்.

சரோஜினி எழுதிய கதையை இவ்வளவுதூரம்தான் படித்தான் நாகரத்தினம். "கல்கி" யைக் கீழே எறிந்தான். அவளைப் பார்த்து என்ன, நாம் இருவரும் மணந்துகொள்வோம் என்ற முழுநம்பிக்கையுடன் என் எதிர்கால வாழ்க்கையைக் கதைபோல்

எழுதினேன். நீ இப்படி உன் எண்ணத்தைத் தெரிவித்ததி லிருந்து என் மனக்கோட்டை இடிந்துவிழுகிறது. உன்னையன்றி வேறுகதி இல்லை என்று எண்ணின என்னைக் கைவிடப்போகி ருயா? சரோஜினி, சரோஜினி, என்று கத்திக்கொண்டே கீழே மயக்கமுற்று விழுந்தான். கண்களிலிருந்து ஊற்றுநீர்போல் நீர் பெருகிற்று.

பாவம் சரோஜினி இதற்கென்செய்வாள்? பெற்ருேர் களுக்குச் செய்யவேண்டிய கடமை கருதுவதா? பிரிவாற்ருது தவிக்கும் நாகாத்தினத்தை மணப்பதா?

"ZAFAR"

"பெண்மைப் பெருந்திரு"

"அரிதரிது மானிடராதலரிது!" இங்ஙனம் போற்றப்படும் மக்கட் பிறப்பின் மாயாப் பெருமையை நற்றவமுனிவரும் நானில அறிஞரும் நன்குணராது தலை தடுமாறுகின்றனர். வானையும் வானிலாடு மீனையும், ஏனைய கோளையும், இம்மன்பதையுலகையும், இன்மையினின்றுமியற்றிய இறை இறுதியில் மக்கண் மரபைப் படைத்தனன் என்பார் கடவுள் நூலறிந்த கறையறு கேள்வியர். முழுமுதற்றன்மையை அம்முதற்பால் அன்புகொண்டாரகத்துட் பதித்துத் திப்பியதிண்மை பரப்புமிப்படைப் பிற்குத் தலையாயவர், மக்கட்பிறப்பெடுத்தாரேயாவர். இவ்வுண்மையை வலியுறுத்துவான் உன்னிய வாலறிவாளரும் "படைத்தான் படைப் பெல்லாமனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று கூறிப் போந்தனர். இத்தன்மைத்தாய மக்கட்பிறவி எடுத்தார் அதன் பயன் துய்க்காது விடுப்பாராயின் அஃது இறைவனது குற்றமன்று. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் முதுமொழிக் கிலக்காய், யாக்கை யாப்புடைத்தாயிருக்குஞான்றே இவ்வரும் பெறற்பேரும் யாக்கையினுதவியால், உயிருக்குறுவதும் ஆற்றல் வேண்டும். படைப்பியலில் தனக்குவமையில்லாத் தனிமுதலினிலக்கணம் பரக்கக்காணப்படுகின்றது. அஃதை உற்று நோக்கின், தெளிவுந் தூய்மையும் மனச்செம்மையும் பெற்றுய்யலாம். இவ்வாறுணர்ந்து படைப்பிற்பயிலும் பண்புகளோடொன்றி உறைபவனே இப்பேருலகில் அதான்றிய பேற்றையும், தன்னை அங்ஙனம் தோற்றுவித்தான் குறித்த குறிக்கோளையும் கறையறஆற்றிப் பேரிருள் துறந்து சீருறு துறக்கத்திற்காளாவான். இச்சீலஞ்செறிந்த செவ்விய செயலை ஆற்றல் மிகுந்த ஆண்மை பூண்ட ஆடவர் தனித்து நின்றாற்றுமியல்பினரல்லராய்க் கற்புக்காப்பணிந்த காதற்கடலாம் பெண்மையின் பேருதவியை அவாவுகின்றனர். ஆடவர் பெண்மையோடிணைந்தாற்றான் தமக்கியல்பாய ஆண்மையானது அமைதியினின்றும் எழுந்தியங்கப் பெறுவர். ஆண்மையும் பெண்மையும் இயைந்து திகழ்வதே மக்கள் வாழ்க்கையின் மாண்டகு செல்வமாம். இங்ஙனம் ஆண்மையும் பெண்மையும் செம்பாதிகளாய்க் கலந்து காதலிற்

றிளைத்துக் காரணனது கருத்தை நிறைவேற்றுவதே மக்கள் கடமையாம்.

பொருள் போலியதாம் ஆண்மை. இடமுங்காலமும் போலியதாம் பெண்மை. காலமும் இடனுமின்றிக் கருப்பொருள் இயங்காமை போன்று ஆணும் பெண்ணும் ஒன்றினாலன்றி உலகம் இயங்காது. பெண்மை அன்பெனும் அளக்கராய் அருளலை ஆர்க்குந் தன்மைத்து. ஆண்மை அவ்வாழிவாய்க் குளித்துத்திளைத்துத் தன் ஐம்பொறிவேடரின் வேட்கையாம் வெப்பத்தைத் தட்டப்படுத்துமுகத்தான் முதல்வனின் கருத்தை நிறைவேற்றிப் பீடு நடை நடந்து வீடு நோக்கி நிற்பது. அன்புப்படிவமாம் பெண்மையும் ஆண்மையும் புனற்கே புனல் கலந்தாற் போல இரண்டறக் கலந்து, கரை சேருமென்பதை உலகுக்கெடுத்துணர்த்துவான் வேண்டியன்றிப் பின் எக்காரணத்தானிறை, இமவான் மானை இடங்கொண்டு, ஆண்மையும் பெண்மையுஞ் சமமாய்க் கலந்த வடிவுடன் மிளிர்கின்றான்? ஆண்மையுடையார் ஆடவரென்றும் பெண்மையுடையார் பெண்டிரென்றும் ஆழ்ந்த அறிவினராலழைக்கப் பட்டனர். பெண்மையின்றி ஆண்மையியங்காதென்பாராய நம்முன்னோர் "சத்தியும் சிவனுமொன்று, சட்டியும் பானையுமண்ணு" என்று சிவமுஞ் சத்தியாகிய பெண்மையாற் றூண்டப்படாவிட்டால் ஐந்தொழிலும் செம்மையாய் நடத்தப்படாதென்பர். அப்பெற்றியே ஆடவர் பெண்டிரொடு ஒன்றி வாழ்க்கைச்சகடத்தைக் காதல் நாணால் பிணித்து வழுவின்றி நடாத்துவதற்கும் பொருந்தும்.

•

செருக்கு, அவா, வெகுளி, மயக்கம் முதலிய நிலைநில்லாப்பொல்லாப் பண்புகள், மக்கட்குப் பொதுவாயினும் ஆடவர்க்கே சிறப்பாம். அன்பு, பொறை, தயை, கண்ணோட்டம் முதலிய தண்மைப் பண்புகள் மங்கையர்க்கே சிறப்பாம். தன்னியல்பில் நிறையப்பெற்று நிற்கும் பெண்மையை அவாவி அதனோடொன்றுவான் வேண்டித் தாவிச்செல்வது ஆண்மையினியல்பாகலின், வெற்றியே தன் பிறப்புரிமையாகக் கொண்ட மெய்வீரனாய ஓர் ஆடவனும், தன்னொப்பில்லா ஓர் மங்கைமாட்டு வென்றிகொள்ளமாட்டாது, தன் படைக்கலன்களையெல்லாம் அவளது மெல்லடிப்போதில் வைத்து, "பாதப்புணை தந்து கடைக்கணருள் பொழி

யாயோ காரிகையே'' என்று கைகூப்பி யிறைஞ்சுகின்றான். அவளது புன்னகை பூத்த இன்முகத்தைக் காணுந்தோறுங் காணுந்தோறுமவனுளத்தில் புதுப்புது இன்பஉணர்ச்சிகள் எழுகின்றன. அவளுயிருடன் ஒன்ற அவன் உள்ளம் அள்ளுறுகின்றது. அவளருள் நோக்கு அவனுண்மையைச் சூறையாடுகின்றது. துறக்கமிழப்பினும், தூய்மையே உருவாய்க்கொண்ட அப்பெண்மையின் பேரின்பத்தைத் துய்க்க அவனுள்ளம் துள்ளித் துணிகின்றது. பெண்மைப்பேரொளியின் பொலிவு கண்ட அவன் அவள்மாட்டுக் கொண்ட அன்பை விண்டு தேறலாமென்றால் அது விள்ளவுந் தள்ளவுங்கூடாக் கொடும்பிணிபோல் அவனுயிரில் வேர்கொண்டு பற்றிவிடுகின்றது. பெண்மை ஆற்றல் மிக்க ஆண்மையை நாற்குணத்தானும் ஐம்பொறிப் புலனுட்டுந் தன்மையானும் தன்னடிப்படுத்தி வாகை சூடுகின்றது. என்னே! அலகிலா உலகெலாம் ஆக்கிக் காக்கு மொருவனின் அருஞ்செயற்பெற்றி!! படைப்பிற்காணும் வேறெப்பொருளும் ஐம்பொறிக்கும் ஒரே அமயத்தில் ஒப்பற்ற இன்பமளிக்கும் வன்மையிலதாய் ஒழிய இப்பெண்மையொன்றுமே ஆடவரவாவிய அளவு எல்லாப்பொறிகளுக்கும் ஏற்ற பெற்றி இன்பமளிக்கின்றது. இதனை உய்த்துணர்ந்த வள்ளுவனுரும்

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டடி கண்ணே யுள" என்று பகர்ந்தார். மேலும் இத்தகைய பேராற்றல் படைத்த மகளிர்மாட்டு மறமகனும் வெற்றிகொள்ள முடியாதென்பதை

"கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்" என்றும்,

"ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு" என்றும் அவர் சாற்றுகின்றார். இனி இவ்வாறு ஆடவர் நுகருமின்பமும் அவ்வின்பத்தின் பயனும் தானேயாகி இல்லறப் பெருங்கடல் நீந்த ஓர் இணையற்ற தெப்பமாகித் திகழும் அரிய பெண்டிரைக் கண்டவிடத்து அவர்மாட்டுத் தன் உள்ளம் செல்லாதும் தன்னிலை திரியாதும் நிற்குமொருவன் ஆடவனுகான்; பேடியே என்பாராய்க் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனுர்,

" மணிமே கலைதன் மதிமுகந் தன்னு
ளணிதிக ணீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன ஞயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
யாடவர் கண்டாலகறலு முண்டோ
பேடிய ரன்றோ பெற்றியி னின்றிடில்" என்று மணிமேகலையி னழகெடுத்துக் கூறுமுகத்தான் பெண்மைப் பெருந்திருவினியல்பு கூறல் உணரற்பாற்று. இவ்வளவு அரியவின்பச் செல்வமாம் பெண்மையின் இன்றியமையாமையும் அதன் பேராற்றலும் ஆடவர் நன்குணர்வாராயின் இவ்வுலகில் துன்பம் ஒழியும்; இன்பம் ததும்பும்; எங்கும் விடுதலை; எல்லாம் நன்மை.

இவ்வாற்றல் மிகுந்த பெண்மை தாங்கிய பெண்டிர் வேந்தன் நின்ற நிலையினின்று, தண்டத்தலைவரைக் கொண்டு தன் ஆணை தன்னிலமுழுவதும் சென்று நடக்கச் செய்யுமாப்போல, தாம் இருந்துழியிருந்து தன் தலைவரைக்கொண்டு இல்வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்ளும் செவ்வியர். அவர்கள் தாமே அவற்றைத் தேடுதலென்பது அவர்கள் கடமையன்று. தண்டத் தலைவர் கடமையை வேந்தனே நேரிற் செய்யப்புகின் அது வேத்தியலுக்கு இழுக்காவதோடமையாது வேந்தனையும் தண்டத்தலைவனுக்குமன்றோ? அஃதே போல் இல்லத்தரசியாம் நல்லாள் தன்னிலை திரிந்து தன்னிடம் பெயர்ந்து வெளிப்போந்து இற்குப்புறம்பாய புறத்தொழிலையியற்ற முனையின் அவளது பெண்மைத்தன்மை பெரிதும் பிழைத்தழியும். தன் கோயிலாம் இல்லத்தில் வீற்றிருக்கும் பெண்தெய்வத்தைப் பல்லாற்றானுமகிழ்வித்து அத்தெய்வம் விரும்பிய எவற்றையும் பெற்றுத்தருவது ஆண்மைக்குரிய ஆடவர் செயலாம். பெண்மையை வீட்டி ஆண்மையைப் பூட்டி வாழ்க்கைப்பொருளை யானே ஈட்டுவன் என்று முந்துபவள் பெண்ணுருக் கொண்ட ஆண்மைப் பண்பினளாவள். இத்தகையாள் கூடுமாயின் ஆண் உடம்பும் பெறத்துணிவது நன்றாம்.

ஆணுக்கு முன்னரே பெண்ணுக்கு அறிவு முதிர்கின்றது. ஆகலின் ஆணுக்கு முன்பே பெண்ணுக்குத் தக்க காலத்தில் தக்க கல்வி தக்கவாறு

பயிற்றுவித்தல் வேண்டும். வாழ்க்கையில் அவள் அலுவலுக்கேற்ற கலைகளையே அவள் கற்றல் சாலும். ஆண்மைக்குச் சிறப்பாய் அமைந்த கலைகளைப் பயில்வதால் பெண்டிர் ஆண்மையை வவ்வித் தாமெடுத்த பெண்ணுருவானும் பெண்மைப் பண்பானும் தாம் நுகரவிருக்கும் இன்பத்தை இழக்கின்றனர். எவ்வாறெனின் அக்கலைகள் தம்மியல்பில் ஆண்மையை மிக்குறுத்துவனவாக அமைந்திருத்தலால் தம்மைக் கற்பார்மாட்டும் ஆண்மைக்குரிய முரட்டுத்தன்மையைப் பெருக்கிவிடுகின்றன. ஆகவே பெண்டிர் அக்கலைகளைக் கற்பதால் தம்மாட்டுள்ள மென்மைப் பண்பை யிழந்து தம்மியல்பில் தடிப்பெய்த, அத்தகையாரை மணந்த மணவாளர்களும் தம்மனைவிமாரிடத்தில் தம்மை மகிழ்விக்கும் மென்மைப்பண்புகளின்மையால் அவர்களை நீக்குகின்றனர். இப்பெண்டிரும் ஆண்மையைத் தாங்கள் ஓரளவு அடைந்திருப்பதால் ஆண்மை பூண்ட ஆடவரை வெறுத்தொதுக்குகின்றனர். ஆண்சத்தியும் பெண்சத்தியும் ஒன்றையொன்று இழுக்குந் தன்மையதாகவன்றோ இறைவன் படைத்தனன். அவற்றை மக்கள் போலிவகையான் மாற்றவே அவைகள் தம்மியல்பில் திரிபடுதல் இயல்புதானே. ஒரு காந்த ஊசியின் இரு முனைகளும் எதிர்மறையினவாக இருந்தாலன்றோ ஒன்றை மற்றொன்று இழுக்கும் வலியுடைத்தாகும். அஃதன்றி ஒன்று மற்றொன்றாக மாறின் அவைகள் ஒன்றை ஒன்று அவாவியிழுக்கும் வலிமையிலதாகி ஊசியிலுள்ள காந்த சக்தியும் பயன்படாதொழியுமன்றோ? ஆனால் சில கலைகள் இருபாலார்க்கும் பொதுவாயின. சில ஆண்களுக்கே சிறப்பாயும் சில பெண்களுக்கே சிறப்பாயும் அமைந்துள்ளன. படைக்கலப் பயிற்சி ஆணுக்குரியது. அதனைப் பெண்கள் பயிலலாமாயினும் பொருகளத்தில் பொருந்தாரோடு பொருதற்குப் பெண்களின் இயற்கைப்பண்பாம் இரக்கமும், தயையும் இடந்தராவன்றோ? நாட்டியக்கலை பெண்ணிற்குரியது. அதனை ஒரு ஆடவனும் பயிலலாமாயினும் அவனரங்கில் வந்து ஆடினால் அவன் ஆட்டம் எவ்வளவு சிறந்ததாயினும் அதனை உலகம் மெச்சுமோ? மிடிவாய்ப்பட்டுக் குடநீரட்டுண்ணும் ஞான்றும் கடனீரற உண்ணும் கேளிர் வரினும் முல்லை முறுவல் தோற்றி முகமலர்ந்து விருந்தோம்பும் செயல் விறல் வேந்தராலும் செய்தற்பாற்றோ? இச்சீரிய செய்கை செவ்விய மனைக்கிழத்தி ஒருத்திக்கே கிழமையாயது.

அறிவற்ற ஆடவர் பலர் ஞாலத்திற் பெண்களை ஞமலியன்ன அடிமைகளாய் அலைந்துழலச் செய்கின்றனர். அவர்கள் மேன்மையை யறியாப் பண்டையாசிரியருட் சிலர் பெண்களை மக்கட் கூட்டத்திற்கு வந்த நமனென நாட்டுகின்றனர். இவ்வாறவர்கள் கூறக் காரணம் என்னையோயெனின் கடவுட்டன்மை கரைபுரண்டோடும் காமர் மங்கையர்பால் அவ்வாடவர்கள் மனம் செல்ல அதனை எதிர்த்துப் போராட மாட்டாமையால் அவர்கள் தயங்கிப் பொறிசிதறிப் பெண்மையை வாயில் வந்தவாறு பிழைபடப் பிதற்றியுள்ளார்கள் என்பது. இப்பிழை செய்தவர்கள் பொதுவாக நீதியுடன் நோக்கும் ஒருவனுக்குச் சினமூட்டும் சிலவற்றைத் தம் நூலுள்ளும் பிதற்றியுள்ளார்கள். கல்வியில் பெரிய கம்ப நாடருங்கூட, பெரிய தவறிழைத்த தயரதன் குறைவை உலகுக்கு நன்கு புலனாக்காது நிறையும் பொறையும் திரண்ட உருவாய கைகேயி என்னும் கற்பரசியைக் கண்டவாறு இகழ்ந்திருப்பதைக் காணுந்தோறும் காணுந்தோறும் கல்மனமும் கரையுமன்றோ! மேலும் அவர் பல இடங்களில் பாவையர்கட்கு நன்மதிப்பு அளித்தாராயினும் சில இடங்களில் அவரது பெருநூலாகிய இராமாயணத்தில்,

"நூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே" என்பது போன்ற பாக்களுமுண்டு. காமமில்லையெனில் எதுவுமில்லை! இன்னும் நந்தா விளக்காம் சிந்தாமணி தந்த திருத்தக்க தேவனாரும் பெண்டிரை அஃறிணைப் பொருளாக வைத்து ஓதியிருப்பது பெண்பாலார்தொகுதிக்கு இழுக்கிழைப்பதொன்றாகும். அவர் நூலில் 'பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா' என்று வருவது இரங்கற்பாற்று. சில மறைகள் கூட மகளிர்க்கு ஆன்மா இல்லை என்று அறைவதை நோக்கின் அவைகள் மறையோ என்பதன்கண் ஐயம் எழும்.

எல்லாநாடும் எல்லாப்பொருளும் கற்றுத்தெளிந்த கவிஞரும் அறிஞரும் இத்தண்கடல் வரைப்பிற் பெண்களுக்கே முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். நம் நாட்டினர்கூட கலை, வீரம், திரு முதலிய பேறுகளுக்கு முறையே கலைமகள், வீரமகள், திருமகள் எனப் பெயர்புனைந்து

வழங்குகின்றனர். புவியைப் புவிமகளெனப் போற்றுகின்றனர். பொங்குங் கங்கையைத் துங்கப்புனல்மகள் என எத்துகின்றனர். கற்றுத் துறைபோகிய நல்லறிவாளராம் கிரேக்கமக்களும் இம் முறையையே கைப்பற்றியிருந்தனரென்பதை வரலாற்றின் வாயிலாக அறிகின்றோம். இன்னும் இந்த மறைப்படி மாயன் மனைவி மார்பிலும் மறைவேதன் மனைவி நாவிலும் சிவன் மனைவி சென்னியிலும் சென்றேறி வாழ்வது கூர்ந்து நோக்கத்தக்கது. கிரிஸ்தவ மறையினரும் வானரசியாய்க் கொள்ளுவது தூய்மைசால் மரியம்மாளையோ அன்றி அவர் கணவன் வளவனுரையோ? எடுப்புமிணையுமற்ற நாடகக்கலை தொடுக்கப்புக்க செகப்பிரியரும் தம் நூல்களில் நிகழும் தீச்செயல்கள் எல்லாம் ஆடவர்களாலும் யாதானும் நன்மை நிகழின் அது நங்கையராலும் நிகழ்வதாக எடுத்துக் காட்டுகின்றனர். பெண்மை திரிந்து வன்மையுற்றால் வாழ்விற்கு எத்துணைத் தீமைவிளையுமென்பதையும் அவர் தம் செஞ்சொற்களால் செப்பியுள்ளார். பெண்டிர் ஆடவர்க்குத் துணையாய் நின்று ஓராவிற்கு இருகோடென்னக் காதலில் ஒன்றி அவனி மெச்சவாழவேண்டுமென்று விரும்பிய நம்முன்னோர்

"காதலிருவர் கருத்தொருமித்
தாதரவு பட்டதே யின்பம்"...என்று சாற்றியுள்ளார்.

மனைக்கடவுளாகிய பெண் அறிவு செறிந்த உளத்துடன் கொழுநனைக் கொழுகொம்பு தழுவிய கொடியெனப்பற்றிச் சீலத்தில் திகழவேண்டுமென்பார்,

"அன்னை தயையு மடியார் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப் பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்". என்று பெண்மைப்பண்பைப் பிழைபடாதோதினர்.

பெண்டிற்குக் கணக்கிடமுடியாத ஆக்கம் யாக்கையேயாகும். அதை அவர்கள் விரும்பியவாறு ஏற்ற ஒருவனுக்கே உரிமையாக்கலாம். அன்றிப் பலர்க்குத் தனித்தனிவகையில் காலவரையறையுடன் உரிமைப் படுத்தலாம். இவ்விருவகையினும் முன்னதே நம் முன்னோரும் அறிஞ

ரும் அறமென ஒப்புக்கொண்ட கற்பாகும். எஞ்ஞான்றும் நின்ற நிலையினின்று தானே கறங்கும் ஞாயிறன்னராம் மகளிர். அஞ்ஞாயிற்றைச் சுற்றிச்சுழலும் கோள்களன்னராம் ஆடவர். ஞாயிறு தன்னிலையினின்று பிறழுமாயின் அதன் வலிகொண்டு சுழலும் கோள்களும் ஏனையவும் நிலைதடுமாறிப் பாழாகுமன்றோ? இவ்வமைப்பே மக்கள் வாழ்க்கையிலும் தென்படுகிறது. பெண்ணானவள் தன்னிலைமை திரியப்பெறின் ஆடவரையும் வாழ்க்கையையும் அழித்துவிடுவளென்பது தெளிவாம்.

பெண்மைப் பெருந் திருவைத் தமதாகக் கொண்ட பெண்டிர், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந், திண்மையுண்டாகப் பெறின்" என்னும் தமிழ் மறைக் கூற்றைக் கடைப்பிடித்து, எங்கெங்குச் சென்றாலும் எம்மறையைச் சார்ந்தாலும் கற்புக் கடமென்னும் வேலியால் தம் பெண்மைப் பெருந்திருவைக் காத்துப் பண்டைப் பெரியோர் பழுதற யாத்த செந்நெறிகளைக் கடைப்பிடித்து நடப்பாராக. "முன்னோர் மொழி பொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவ" மென்று மார்புதட்டி எழுவாராக. தமிழும் தமிழ் பயில் நாடும் நாடெனத் தலையிற்றாங்குவாராக. தம்மைத் தழுவி வாழும் கொழுநனே கோனெனக் கொள்வாராக. நாட்டை நன்னெறிப் படுத்தத் தஞ் சிறுவர்க்கு நன்னடை நல்கும் செந்தமிழ் பயிற்றுவாராக. "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" எனப் பல்லாண்டு பாடுவாராக. தமிழ் நாடு தந்நாடென நம் நங்கையர் உணர்ந்து இத்தண்டமிழ் நாட்டில் "பசியும் பிணியும் பகையு நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி" வழுத்துவாராக. தமிழ் வாழ்க!

M. L. பாண்டியன்,
IV B. A. Hons,

சித்திரத் தாமரை

நான் ஒவ்வொரு நாளும் விழித்தெழுந்தவுடன், எனது வீட்டின் பின்புறத்தில் உள்ள பூஞ்சோலைக்குச் செல்வது வழக்கம். அது சமயம், கதிரவன் செம்மை ஒளி நல்கி அங்குள்ள மரஞ்செடி, கொடிகளைக்காணும் செல்வத்தை அளிப்பான். அம்மரஞ்செடிகள் அப்போது வீசும் மெல்லிய இளங்காற்றால், அசைந்து அசைந்து ஆடுவதுடன், அரும்புகள் எல்லாம் மலர்ந்து இருக்கும். என்னை இவை முகமலர்ந்து அழைக்கின்ற காட்சியைக் கண்டுகொண்டே அவற்றினிடம் போவேன். அங்குச் சென்றதும், அம்மலர்கள் தம்மிடத்தில் உள்ள மணமாகிய தூதுவனை அனுப்பி, வண்டுகளை அழைத்து, அவைகளுக்குத் தன்னிடம் உள்ள தேனை முகமலர்ச்சியோடு அளிக்கும் அழகையும் கண்டுகளிப்பேன். இவ்விதக் காட்சிகள் கண்ணிற்கு இனிமையும், வண்டுகளின் ஓசை காதிற்கு இனிமையும், மலர்கள் அளிக்கும் மணத்தால் மூக்கிற்கு இனிமையும், மெல்லிய காற்றுப்படுவதால் உடலிற்கு இனிமையும், மலரிலிருந்து சிதறிய தேன்துளிகள் காற்றோடு கலந்து நாக்கிற்படுவதால் நாக்கிற்கினிமையும் அளிக்க, ஆறும் புலனாகிய மனமும் ஒன்றுபட்டு இன்பத்தையடையும். அது சமயம் நான்வேறு, அவைவேறு என்று எண்ணமல் ஒற்றுமைப்பட்ட உள்ளத்தோடு சிறிது கலந்து பழகிப் பின் என் கலாசாலைக் கல்வியைக் கற்பது பழக்கம்.

இவ்வாறு பலநாள் பழகியபின் ஒரு நாள் பன்னீர்மலர் மரக்கிளைகளில் இருக்கக்கண்டேன். மல்லிகை மலர், கொடியில் இருப்பதைக் கண்டேன், இரோசா மலர் செடியில் இருப்பதைக்கண்டேன். இவ்வேறு பாட்டைக்கண்டயான், தந்தையினிடம்போய், "அப்பா மலர்கள் செடியிலும், கொடியிலும், மரத்திலும் இருக்கும் பிரிவைப் பார்த்தீர்களா?" என்றேன். அதற்குத் தந்தை "நீ கண்டது மூன்று வகையாகும். மற்றொருவகையுமுண்டு. அது நீரில் இருப்பது" என்றார். "குளத்தில் இருக்கும் தாமரையா?" என்றேன். "ஆம்" என்றார். உடனே "அப்பா! நீரில்தோன்றியது நீர்ப்பூ என்றால், கொடியில்தோன்றுவது கொடிப்பூ, மரக்கோடுகளில் தோன்றுவது கோட்டுப்பூ, செடியில் தோன்றுவது செடிப்பூவாகுமா" என்றேன். "நீ சொன்ன நீர்ப்பூ—கொடிப்பூ—கோட்டுப்பூ இவை சரியாகும், செடிப்பூவிற்கு மாத்திரம் நமது முன்னோர்கள் நிலப்பூ எனப்பெயர் வைத்திருக்கிறார்கள், நாமும்

அவ்வாறே சொல்லவேண்டும்" என்றார். எனது உள்ளம் செடிப்பூ என்றே சொல்லவேண்டும் என்று தூண்டியது. இருப்பினும் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்ற பழமொழிப்படி, மலர்களில் நான்கு வகையுண்டு, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ, நிலப்பூ என அறிந்துகொண்டேன். மறுநாள் முதல் சில நாள் தோட்டத்திற்குச் சென்று இம் மூவகை மலரைக்காண்பேன்; சில நாள் குளத்திற்குச் சென்று நீர்ப்பூவின் அழகையும் கண்டுவருவேன்.

இவ்வாறு வரும்நாளில் ஒரு நாள் என் கலாசாலை ஆசிரியர் "சீதை, இனி இராமன் நம்மை வந்து அழைத்துப்போவானோ அல்லது தள்ளிவிடுவானோ என்ற ஐயங்கொண்டவளாய் இலங்கையிலுள்ள அசோகவனத்திலிருந்துகொண்டு அவனது முக அழகை நினைந்து, நினைந்து பின்வருமாறு உருகுகிறாள். 'அயோத்தி அரசை அடைவாய்' என்று தசரதன்கூறிய இன்பமொழியைக்கேட்டபொழுதும், 'அயோத்தி அரசைவிடுவாய், காட்டிற்குச் செல்வாய்' என்று கைகேயி கூறிய துன்பமொழியைக் கேட்ட காலத்திலும், அழகாக எழுதப்பட்ட மலர்ந்த தாமரை மலரைப்போல் முக அழகு, இன்பநிலையிலும், துன்பநிலையிலும் வேறுபடாது ஒத்த அழகுடன் விளங்கியதைக் கண்ட சீதை, அம் முக எழிலில் ஈடுபட்டு அவ்வழகை என்று காண்பேன் என உள்ளம் குழைகிறாள்" என்று கூறினார்.

"மெய்த்திருப்பதம் "மேவு" என்ற போதினும்
இத் திருத்துறந்து "ஏகு" என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள்"

இப்பாடலுக்குப் பொருள் சொன்னார்.

கவிச்சக்கரவர்த்தி என்ற கம்பர் செயற்கையாக அழகுடன் எழுதப்பட்ட மலர்ந்த தாமரையை உவமை கூறியதனால், இயற்கையாக நாம் காணும் நீரில் தோன்றும் தாமரையழகை அவர் நன்கு காணவில்லை என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. பின் நான் ஒரு மலர்ந்த சித்

திரத்தாமரை எழுதி அதை இயற்கைத் தாமரையோடு ஒப்பிட்டுப்பார்த்தேன். இயற்கைக்கே சிறப்பு மிகுதியாகத் தோன்றியது.

நீரில் நிற்கும் இயற்கைத் தாமரை தன்னிடம் உள்ள தேனை வண்டுகளுக்கு அளிக்கின்றது. இவ்வியற்கை மலரிற் கலைமகளும், திருமகளும் வாழ்கிறார்கள். இயற்கை நலனை நன்கறிந்த முற்றத்துறந்த முனிவராகிய திருநாவுக்கரசர் ஐந்தெழுத்தின் பெருமையைக் கூறவந்தவர் எல்லாப்பூவிலும் தாமரையே அழகு வாய்ந்தது என "பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை" என்று கூறினர். இவற்றால் இயற்கைத்தாமரையே சிறந்ததாகவும் கம்பர் கூறிய செயற்கைத் தாமரை இழிவுள்ளதாகவும் அறிந்தேன். இவற்றின் தன்மைகளைப்பற்றிப் பல நாள் எண்ணிச் சிறந்தது எது என்று நினைக்கும்போது வேறொரு புதிய எண்ணம் உண்டானது. மலர்ந்த கோட்டுப்பூவைப்போல், இராமன் முகம் இருந்தது என்றாவது கூறி யிருக்கலாமே என்று எண்ணினேன். பின் பலரிடம்போய் இக்கருத்தைச் சொல்ல, அவர்கள் திருமால் முகத்திற்குத் தாமரைமலர் உவமையாகும் என்று கூறினார்கள். அப்போதும் நீரில் மலர்ந்த இயற்கைப்பூ உவமையாவது சரி. சித்திரத்தில் மலர்ந்த தாமரை எவ்வாறு உவமையாகும் என்று சொல்லிவிட்டு, இளிப் பிறரிடம் கேட்பதால் சந்தேகம் மேலும் மேலும் விளைகிறதே ஒழிய நீங்கினபாடில்லை என்று எண்ணி இனி நாம் "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழிப்படி பழைய நூல்களைப் படிப்போம் என்று நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களைப்படிக்க ஆரம்பித்தேன். நாலடியாரில் நட்பாராய்தல் என்ற அதிகாரத்திற் கோட்டுப்பூ என்ற ஓர் பாடல் வந்ததாகக் கண்டேன். என் உள்ளம் அப்பாடலைப் படி, படி எனத்தூண்டியது. இழந்த செல்வத்தை அடைந்தவன் போன்று அப்பாடலைப் படித்தேன். அப்பாடலைப் பாடியவர்க்கு எனது வணக்கத்தைச் செலுத்தினேன். இவரல்லரோ நம் ஐயத்தை நீக்கிய புலவர் என்று வியந்தேன். வியந்து மறுபடியும் படித்தேன். நான் அடைந்த மகிழ்ச்சி கணக்கில் அடங்காததாகும். என்னவென்றால், மலர்ந்த கோட்டுப்பூ மலர்ந்தவண்ணமேயிருந்து குவியாமல் அழிந்து போகின்றது. நீர்ப்பூ காலையில் மலர்ந்து மாலையில் குவிகிறது. இவ்வாறு சிலநாள் மலர்ந்து குவிந்து பின் அழிகிறது. அவ்வாறே இன்பநிலை

யில் மலர்ந்து துன்ப நிலையிற் குவிந்தால், நீரில் உள்ள தாமரைப்பூ இராமன் முகத்திற்கு உவமையாகும். இன்பத்திலும் மலர்ச்சி, துன்பத்திலும் மகிழ்ச்சி ஆகிய இரு பொழுதிலும் முகமலர்ச்சியாக இருத்தலினால் இராமன் முகம் இயற்கைத் தாமரையின் தன்மையை வென்றது என்று உவமைக்கு ஓர் இழிவு கொடுத்தும், இராமன் முகத்திற்கு ஒரு சிறப்புக் கொடுத்தும் பாடியுள்ளார் என்பதை அறிந்தேன். கோட்டுப்பூ இன்பமலர்ச்சி மாத்திரமே பெற்று அழிந்து விடுவதால் அதைக் கூற வில்லை என்பதும் நன்கு விளங்கிற்று.

அப்பாடல் பின்வருவாறு:—

"கோட்டுப்பூப்போல மலர்ந்து பின் கூம்பாது
வேட்டதே வேட்டாதாம் நட்பாட்சி—தோட்ட
கயப்பூப் போல் முன் மலர்ந்து பின் கூம்புவாரை
நயப்பாரும் நட்பாருமில்."

(தோட்ட கயம் = தோண்டப்பட்ட குளம்: நயப்பார் = விரும்புபவர்).

இப்பாடலின் உரையால், திருக்குறளிலும் இக்கருத்து உள்ளதென அறிந்தேன்.

"உலகம் தழீஇயது ஓட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு" என்ற பாடலைப்படித்த பொழுது என் உள்ளம் பேருவகையடைந்தது. இவ்விதம் இன்ப நிலையிலும் துன்ப நிலையிலும் ஒரே இயல்பாக உள்ள தன்மை இராமன் முகத்திற்கன்றி, அவன் முகத்திற்கு உவமைகூறும் தாமரைக்கு இல்லை என்று எண்ணினேன். பின் கைகேயி இராமனைக் காட்டுக்குப்போ என்று சொன்னபொழுது கம்பர் எவ்வாறு சொல்லியிருப்பார் என்று இராமாயணப்பாடலைப் பார்க்கும்போது, அவர் அசோகவனத்திலிருக்கும் சீதை வாயிலாக "சித்திரத்தாமரை" என்று போட்ட முடிச்சை அவிழ்க்கின்றார் என்றறிந்தேன். எவ்வாறென்றால், இந்தச்சமயம் (காட்டிற்குப்போ என்ற சமயம்) எந்தப்புலவராலும் கூறமுடியாது என்று கம்பரே வியப்புடன், அருங்குணத்தையுடைய இராமன் முக அழகைக் கண்டு, "அரசாட்சி செய்," என்று தசரதன் கூறிய காலத்தில் உள்ள முகமலர்ச்சியே காட்டுக்குப் போ என்று சொன்ன காலத்தில் இருந்ததாகையால்

இவனது முகவழகு இவனுக்கு ஒப்புமை கூறும் உவமைத் தாமரையில் இல்லை என்று கூறினர். அதனுல் அத்தாமரை மலரை இவன் முகம் வென்றது.

"இப்பொழு தெம்மனேரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங்குணத்திராமன் றிருமுகச் செவ்விநோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக்கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வெள்றதம்மா.

நீர்ப்பூவாகிய தாமரையை இராமன் முகம் வென்றது என்று கூறி விட்டதாற் பின்னும் அதனையே உவமையாகக் கூறுதல் பொருத்தமா காது, ஆதலின் கம்பர் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை எனச் சீதை வாயிலாக நன்ருக அழகு பொருந்த உவமை கூறியுள்ளார். மலர்தல், கூம்பல் இல்லாது சித்திரத்தில் உள்ள தாமரை ஒரே நிலையில் இருப்பது போல இராமன் முகம் இன்பதுன்பமாகிய இரண்டிலும் ஒரேவிதமாக இருந்தது என்று கம்பர் அழகாகச் சித்திரம் செய்திருக்கின்ருர்.

இவற்ருல், மலர்கள் நால்வகைப்படும் என்பதும், இராமனது முகம் நீர்த்தாமரையை வென்றது என்பதும், சித்திரத்தாமரையே இரா மன் மலர்ந்த கருணை முகத்திற்கு உவமையாவது என்பதும் ஒருவாறு அறிந்துகொண்டேன்.

R. செல்வராஜன்,
II U. C.

விரக்தி

ஊர் அடங்கிவிட்டது. வெட்டவெளிச்சமான வெண்ணிலவு பட்டப்பகல்போல் விண்ணெங்கும் விரிந்து கிடந்தது. ஓரிரண்டு ஒளிர்விடு மேகப்படலங்கள் — வெண்மை அதனுடன் கருமையுங் கலந்த மேகப்படலங்கள் வானில் மேய்ந்துகொண்டிருந்தன. மின்னென மிளிர்ந்தன மீனினமெலாம் வானில். ஆனால் அவை அவள் கண்ணிமைப்பு இகழ்வதாக இல்லை. மின்னிடும் அவள் கண்களுக்கு மிக உவமை காட்டி இருக்கலாம். மாலைப் போழ்தில் வாரி விடுத்திருந்தாள் மையெனுங் கூந்தலை. ஆனால் அது சீலைக்கோட்டில் சிறிக்கிடந்தது அவ்விரவில். அஃது சிறுஞ் சினத்தால் என்பதற்கில்லை. தாமரை அவிழின் தனிபடுந் தேனெனஅங்கு அவள் கண்ணில் கலங்கின நீரும். கலங்கிய நீரும் தனித்துத் துமித்தன.

மணமாகவில்லை என்ற மயக்கம் — அன்றி கணவன் காணக் கிடைக்காத தொலைவில் உள்ளான் என்ற குறை இவை மதினுவிற்கு வேண்டியதில்லை. மணம் முடிந்துவிட்டது — கணவனுங் கட்டிலில் கவின்பெற கண்ணயர்கின்றான். ஆனால் அக்கணவன் சுரேஷாக இன்றி சுரேஷாக இருக்கிறானே என்ற குறைதான் அவளுக்கு. இதுதான் அவளின்—நம்மதினுவின் துக்கம்—துயரம் — துன்பம் — குறை எல்லாம்.

•

அவள் சுரேஷுவை மணப்பதாக மனதில் சூழ்ந்தாளில்லை—கருத்தினில் வகுத்தாளில்லை.—அன்றி கனவில் கருதினள் என்பதற்கும் இல்லை.

வட ஆர்டிக் வேலையில் வகையின்றி மிதக்கும் ஒரு துடுப்பு தென் ஆர்டிக் திரைகடலில் திசைமாறித்திரியும் ஒரு தெப்ப ஓட்டியின் கைபடுமாம் அது. இது உலக இயற்கை—தெய்வப் பிரீதி—திருவிளையாடலுங் கூட.

சுரேஷ் அழகற்றவன் என்பதற்கில்லை. அறிவு அற்றவன்—ஆண்மை அற்றவன் என்பதற்குமில்லை. பொருள் பெற்றவன்,

இல்லை என்பதற்குங்கூட இல்லை. எல்லாம் பெற்றவனும் உடையவனும் அவன். ஆனால் மதினாவின் அருள்மட்டும் பெற்றவனில்லை. அது அவர்கள் அதிருஷ்டம்!

மனமென்கின்ற கோவிலில், பதி என்கின்ற பீடம் ஒன்று. மற்றொன்று சதி என்கின்ற பீடம். அன்பென்னும் நாண்மலர்கள் அர்ச்சனைக்கு அமைக்கப்பட்டிருந்தன. காதல் என்னும் தூபம் கமழா நின்றது. மதினாபதியெனும் பீடத்தில் மதித்து மகிழ்ந்து மனமாற எந்தும் தெய்வம் சுரேஷ். ஆனால் சுரேஷ் துதிப்பதும் தொழுவதும் மதினாதேவியைத்தான். அவர்கள் ஒன்றிற்குக் கடவுளை வழிபடுகின்றனர். ஆயின் தெய்வம் மற்றொன்றிற்கு வழிவிடுகின்றது. கனி கிடைக்கலாம். ஆனால் கடிக்க இயலாமல் ஏங்கலாம். கனி தொலைவில் தொங்கலாம். ஆனால் அதைப் பெறும் பாக்கியம் உண்டாக, காலடியில் கதியென விழலாம். இது இயற்கைத் தத்துவம். மனோபாவ எண்ணங்களுக்கு எட்டாத ஒரு மந்திரம்.

கரோஷாவிற்கு மிகக் களிப்பு. காணக்கிடைக்காத தங்கமும் கைப்பட்டதே என்கின்ற வியப்பும் மகிழ்வுங்கூட. பிச்சைக்காரனுக்குக் கூடவா பெண்டாட்டி என்ற பேதமை. மங்கையர்தம் எழிலுக்கு மதினாதான் அரசி. அவ்வரசிக்கும் அரசன் தானென அவள் தேர்ந்தெடுத்ததில் கரோஷாவிற்கு ஒரு அலாதியான கருவம். கருவம் கொண்டவர்கள் சட்டெனக் கவிழ்ந்து விடுவர் என்ற கதை கரோஷ் அறியாதவன். பாவம்! அவனுக்கு எப்படித் தெரியும்? மதினாவை அவள் எண்ணங்களுக்கு மாறாக—தன் ஆகாயக் கோட்டை கவிழக்காரணமாக — காலக் கொடுமையின் விளைவாக —ஏழ்மையின் சூழ்ச்சியாக — பணத்தின் காரணமாக — சுரேஷாவின் தெய்வ வழிபாட்டிற்காக அவள் பெற்றோர்கள் அவனைச் சுரேஷாவிற்கு மணமுடிப்பார்கள் என்று.

மதினாவை மணம்செய்து கொள்ளலாமென்று எண்ணினான். ஆனால் பணம் பைசாகூட இல்லை. பணம்தேட பம்பாய் சென்றான். பணத்துடன் வந்து மணப்பதாகச் சொல்லிவிட்டுப் போனான் மதினாவைப் பிரிந்து.

சின்னஞ்சிறிய உத்தியோகம். கை ஒடியும் வேலை — ஓயா உழைப்பு. மாதத்தில் இரு இரண்டு நாள் விடுமுறையும் இருபது ரூபாய் சம்பளமுந்தான் அவன் கானும் பலன். தலை சுற்றும் — வேலைசெய்ய ஓடாது—வெறுப்புத்தோன்றும். மதினுவருவாள்— ஆனுல் மனக்கண்முன்தான். மயக்கம் தெளிவிப்பாள்.—மருந்து கொடுப்பாள், சோர்வின்றி —சோம்பலின்றிச் சுறுசுறுப்பாய் வேலை செய்யுங்கள் — சம்பாதியுங்கள் — சேமியுங்கள் — ஆனுல் பட்டினி இருக்கவேண்டாம். சீக்கிரம் திரும்புங்கள். காலத்தை நம்ப முடியாது — மணமுடித்துக் கொள்ளலாம். பின்னர் வேண்டுமானுல் பிச்சைகூட எடுக்கலாம்— கவலையில்லை. என்னிடம் — எங்கள் பெற்ருேரிடம் பணமிருந்தால் உங்களை இப்படி வருத்தமாட்டேன் — வருத்தப்படும்படியாகப் பார்க்கமாட்டேன். சரி போய் வரட்டுமா !

“போகவா போகிருய், வேண்டாம்,” எனத் தலை நிமிர்வான் சுரோஷ். ஆனுல் அவள் அதற்குள் போய்விடுவாள். பின்னர் அஞ்ஞான உலகத்தினின்று — அந்தகார உலகத்தினின்று — கற்பனு உலகத்தினின்று — கனவு உலகத்தினின்று தன் வேலைக்குத் திரும்புவான் அவன். அவன் எண்ணினுன் திடமாக மதினுவை மணக்கலாமென்று. அதனுல் ஓயாது உழைத்தான். ஆனுல் அவள் ஏமாற்றுவாள் — ஏமாந்து விடுவான் என்று இவன் நம்பவில்லை — அவளும் அறியவில்லை, இவையெல்லாம நடந்தது கலியாணத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான்.

•

அன்று புதன்கிழமை. வெள்ளிக்கிழமை மாலை வெள்ளையர் நாட்டிற்குக் கப்பல் பம்பாய்த் துறைமுகத்தினின்று புறப்பட்டுவிடும். ஆகையால் மிக அவசரம். ஏற்பவருக்குப் பணிசெய்ய வேண்டுமே என்ற பரபரப்பு ஒருபுறம். புதன்கிழமை மாலை மறைவிற்குள் எல்லாம் தயாராகிவிடவேண்டும். பஞ்செல்லாம் பாடம் செய்து புகைவண்டியில் புகுத்திவிடவேண்டும். மணி நான்கடித்தது.

பரபரப்பு எல்லாம் அவரை வருத்தியது. மிகவேகமாக வேலை செய்துகொண்டிருந்தன அப்பஞ்சாலையின் இயந்திரங்களும்

சக்கரங்களும். திடீரென கடக் என்ற சப்தம். 'ஐயோ!' என்ற அலறல். "ஜெகதீஸ் கைமுறிந்துவிட்டது — ஜெகதீஸ் கை முறிந்து விட்டது" என்று எங்கும் ஒரே அலறல். ஒருவர் ஓடி னர் மதினுவிடம். "மதினு உன் தந்தையின் கை ஒடிந்து விட்டது பஞ்சாலையில்"—எங்கும் வீட்டில் சோகவெள்ளம்.

படுகின்ற காலிலே படுகின்றது. கெடுகின்ற குடியே கெடு கின்றது. இஃது உலகம் உணர்ந்த ஓர் இரகசியம். படுக்கையில் கிடக்கிருர் ஜெகதீஸ். பக்கத்தில் பழம்பாயில் கிடக்கிருள் அவர் பத்தினி. எல்லாம் மனநோய். இருபது தினங்கள் ஓடி விட்டன அன்றாடம் நானுபணம் அகப்பட்டால் சோறுண்டு. என்ருகினும் கிடைக்கும் இலைபோட்ட சாப்பாடு என்ற நிலையில் ஜெகதீஸ் வாழ்வைக் கடத்திவந்தார் முன்பு. அதுவும் இல்லை இந்த இரு பது தினங்களாக.

பால்கறக்கும் ஒரு காமதேனு—நல்ல பசு. அவர்கள் குடும்ப மேற்செலவுக்கு வழிகாட்டும் ஜீவநாடிபோன்றது அது. அதுவும் அன்றுமுதல் ஏமாற்றிவிட்டது. எங்கேயோ மேயச்சென்றது — மறைந்துவிட்டது — திரும்பி வரவே இல்லை அந்தத் தூரோகப் பசு!

மதினுதான் இனி உழைக்கவேண்டும். ஆகையால் உழைத் தாள். பஞ்சை நூற்ருள். ஆனுல் எவ்வளவு நூற்க இயலும்! போதிய வருவாய் இல்லை. பட்டினி — பட்டினி, மூன்று நாட் களாகப் பட்டினி. பகல் பட்டினியோடு இராப்பட்டினியும் இரண் டறக் கலந்தது. எல்லாம் விதி! இன்றே நாளையோ என எண்ண மிட்டுக் கொண்டிருந்தது மதினுவின் தாயாரின் தனி உயிர்.

வதோ பேச்சுகள் — கலியாணப் பேச்சுகள்தான் நடைபெற் றன வீட்டில். அப்போது ஒரு ஆத்மாகூட இருந்தது. அதுதான் சுரேஷ். மதினுவிற்கு ஒருவாறு விஷயங்கள் விளங்கிவிட்டன.

அவளால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. பெற்றவயிறு சம் மதித்தால் பிள்ளை மணம் நடைபெறவேண்டியதுதான் பாக்கி இது இந்து தர்மம் — இந்து சமுதாயத்தின் இனிய வேதநெறி.

"ஏன்," என்று கேட்டாள். "கலியாணம் தனக்கா, பெற்றோர்களுக்குத்தானா என்று கேட்டாள். ஆனால் நீர்மானம் சுரேஷாவை அவள் மணந்துதான் ஆகவேண்டும். அவள் மறுப்புகளுக்கு மதிப்பே கிடையாது.

"மதினா!" நம்முடைய துன்பங்கள் விலக நீ பணக்காரனான சுரேஷாவை மணந்துகொள்! அவனுக்கு ஒன்றுங் குறைவில்லை. சுரேஷாவை மறந்துவிடு. வீட்டின் நிலையை நினைத்து நட" என்றார் தகப்பனார் ஜெகதீஸ். "அப்படித்தான் செய்யவேண்டும்" என ஒத்துப்பாடினாள் தாயார். "உங்களிஷ்டம்," என ஒடுங்கிவிட்டாள் அலட்சியமாக அன்பின்றி மதினா.

நாலைந்து நாட்களே நடந்தன. நல்ல சுபதினம். பெரிய மாளிகையில் மத்தளங்கள் கொட்டின. மதினா மாலையிட்டுவிட்டாள் சுரேஷாவிற்கு. இனி அவர்கள் கணவனும் மனைவியும்—மலரும் மணமும் போல. ஆனால் அவள் கண்களில் கவர்ச்சி இல்லை. உள்ளத்தில் ஒளியில்லை.—உணர்வு இல்லை. ஆத்மாவில் அன்பில்லை. உடலில் உயிர் இல்லை. கருத்திலோ காதலில்லை. இனி அவள் எல்லாவற்றிற்கும் அரசியாகலாம். நூல் நூற்கும் அவள் தன் மெல்லிய நுண்ணிய கை — பஞ்சைமேவுமவள் பஞ்சுக்கை — செம்பஞ்சுக்கை இனி செல்வமும், எழிலும் ஒன்றுபட செங்கோலோச்சலாம், பழங் கந்தையை விழைந்துடுத்திய அவள் எழில் மேனி இனி எழிற்பட்டால் செம்மை உறலாம்.— அவற்றிற்கென அதிருஷ்டமுடையவள். ஆனால் உதறுந்தன்மையளாயினாள் அனைத்தையும். மிக தூர் அதிர்ஷ்டம்! அவள் எண்ணம் எல்லாம் பம்பாயிலே பஞ்சையாய்ப் பறக்கும் சுரோஷாவின் பால் தான்.

மனைவியாகி ஒருவாரங்கூட ஆகவில்லை. வாசற்படியில் அன்று நின்றுகொண்டிருந்தாள் — மிக்கவருத்தத்துடன்.

ஒரு கணைப்பு ஒலிகேட்டது. சற்று திரும்பிப் பார்த்தாள். ஒருவருமில்லை — சுரோஷ்தான். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்து நின்று விட்டாள். கண்கள் சுழன்றன.

சற்றுப் பொறுத்து கரோஷ் கேட்டான்— "என்ன மௌன மும் அலங்கோலமும். நோன்பு ஏதாகிலும் நோற்கிருயா?—பேச மாட்டாயா?"

"ஆம்! பேசுகிறேன். போய்விடுங்கள். இவள் பழைய மதினு அல்லள். இவள் பாபி மதினு — அவள் இறந்துவிட்டா ளென எண்ணிவிடுங்கள். என்னைப்போல் நீங்களும் வேறு கலி யாணம் செய்துகொள்ளுங்கள். — மன்னிக்கவும்" என்ருள் மதினு அழுத குரலில்.

"நான் கலியாணம் செய்துகொள்வதற்கு நீ என்ன?—இனி சுகமாக — சந்தோஷமாக நீ வாழ்ந்தால் போதும்." எனப் பிதற் றிக்கொண்டே நகர ஆரம்பித்தான் கரோஷும். அவனுக்கு எங் குச் செல்வது, என்செய்வது, எதைச்செய்வது என்று விளங்க வில்லை. இனி வாழ்வு வேண்டாமென்பது அவன் தீர்மானம். "கலியாணமாம் கலியாணம்—ஏன்." என்று முணுமுணுத்தான்.

"கோபம் வேண்டாம்— என்னிலைமை உங்களுக்குத் தெரி யாது. அடுத்த பிறவியிலாகினும் நீங்களும் நானும் காதற் கண வனும் மனைவியுமாக வாழக் கடவுள் வழிகாட்டட்டும்," என அழு தாள் அவள். ஆனுல் அவன் பேசவில்லை. எங்கேயோ மறைந்து விட்டான்.

அவள் சிந்தித்தாள். இரவு பன்னிரண்டு மணி.—"ஏன் அவருக்கு மாலையிட்டு மணந்தேன் — மனைவியானேன். அவர் என்னை உண்மையில் நேசிக்கிருர். அவருக்கு ஒரு குறைவும்கூட இல்லை, சரி! இனி நான் அவருக்கு உண்மை மனைவியாய் இருக்க முயல்வேன். மணமானபின் மற்றவரை நயந்து கொண்டவனை அகற்றுவது பாவமன்ருே! ஆம் இனி நான் அவருக்கு உண்மைப் பத்தினி —தவறேன் இது சத்தியம்.

தீர்மானித்துவிட்டாள். சிலைக்கோட்டில் சிறிக்கிடந்த கூந்தலை முடித்துக் கொண்டாள். கண்களில் கவர்ச்சிகொண்டு கண்ணய ருங் கணவனைக் கண்டாள், உள்ளங் குளிர்ந்தாள். அவளுக்கு இனி உலகம் இன்பமாக உதவியது.

C. R. நரசிம்மராஜ், வித்வான், முதலாண்டு.

பெருங்'காயம்'

சைகைப் புலவர்

முன்னாளில், மாளவ நாட்டில் ஒரு சிறந்த சைகை சாஸ்திரி இருந்தார். அறிவின் பல்வேறு வகைகளைச் சைகைகளின் மூலம் வாதிப்பதில் அவர் வல்லவர். அவர் பல புலவர்களை இக் கலையில் வென்றிருந்தார்.

"வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுல கத்து" க்கும் அவர் வந்தார். சின்னாட்களைக் காஞ்சிமா நகரிற் கழித்தபின்னர் அவர் மதுரையம்பதிவாழ் பாண்டியர்கோனை அணுகி, "எம்மைச் சைகைச் சாத்திரத்தில் வெல்ல ஓரறிஞர் நுமது அவையிலுளரா?" எனச் செருக்கோடு இடும்பாக கேட்டனர். மன்னனும், அவரது செருக்கை அடக்கத் தீர்மானித்து "புலவரே! யாம் நாளையதினம் பிற்பகலில் எமது சைகைப்பண்டிதரை வரவழைப்பாம். நீர் அப்பொழுது அவரோடு வாதிக்கலாம்" எனப் பதிலிறுத்தனன்.

ஆனால், அவை கலைந்தபின்னர் மன்னர்கோன், அரண்மனை மடைப்பள்ளிக்குச் சென்று, அங்கிருந்த சுப்பன் என்ற வேலைக்காரனோடு இரகசியமாகப்பேசி அனுப்பினான். அச்சுப்பன் என்பான் ஒற்றைக்கண் குருடனாவன்.

மறுநாள் அரச அவையில் ஏராளமான கூட்டம். மாளவ நாட்டவர் ஓர் உயர்ந்த ஆசனத்தின்மீது அகம்பாவமும் கம்பீரமும் தோன்றும் முகத்தோடு அமர்ந்திருந்தனர். அவர்க்கெதிரில் பாண்டியநாட்டுப் புலவர் பற்பல பூஷணங்கள் அணிந்து அமர்ந்திருந்தார்.

விவாதம் ஆரம்பமாயிற்று. மாளவநாட்டினர் ஒரு விரலைக் காட்டினபொழுது பாண்டியப்புலவர் இரு விரல்களை நீட்டினர்.

பின்னர் மாளவநாட்டார் மூன்று விரல்களைக் காட்டிய பொழுது, பாண்டியநாட்டினர் தமது முஷ்டியை ஆட்டினர்.

தமது மடியிலிருந்து ஒரு விலைமதிப்புள்ள இலந்தம்பழத்தை விட்டெறிந்தார் மாளவநாட்டார். ஆனால் பாண்டியநாட்டார் ஓர் தோசைத்துண்டத்தை விட்டெறிந்தார்.

"உங்கள் நாட்டவர் வென்றார். நான் தோற்றேன்" என்று கூறி எழுந்தார்.

"நீங்கள் விவாதித்ததின் விவரத்தைக் கூறுங்கள்" என்றான் மன்னர்.

புலவர்—மாளவநாட்டினர்—கூறலானார்:—'யான் கடவுள் ஒருவர்தானே' எனப் பொருள்பட ஒரு விரலை நீட்டினேன். அவர் 'அந்தராத்மா, ஜீவாத்மா என்று இருவர் என்று கூறலாகாதோ' என்று தமது இரு விரல்களால் சுட்டிக் காண்பித்தனர். நான் 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்ற மூன்று வேலைகளைச் செய்வதால் மூவர் என்று கொள்ளலாகாதா? என்று மூன்று விரல்களை நீட்டினேன். 'எப்படியானாலும் கடவுள் ஒருவரே' என்று தமது முஷ்டியை நீட்டினர். ஆடம்பரமானதும் அதிக விலைபெறுவதுமான இந்த இலந்தைப்பழத்திலும், ஈசன் இருக்கிறானன்றோ! என்ப் பொருள்பட இலந்தைப்பழத்தை விட்டெறிந்தேன். உங்கள் நாட்டவர் ஆடம்பரமற்ற சாதாரணப் பொருளாகிய தோசையிலும் கடவுள் இருக்கிறார்" என்று அறிவுறுத்தினர். நான் தோற்றேன்."

அரசன், தம்நாட்டுப் புலவரை நோக்கி "அடே, சுப்பு! நீ இவரோடு என்னவோ கையாட்டிக்கொண்டிருந்தாயே! அதை விவரித்துச் சொல்" என அதிகாரத்தோடு கூறினான்.

மாளவநாட்டினரோ, இதைக் கேட்டவுடன் இடியுண்ட நாகம் போலானார். சபையினரும் பாண்டியநாட்டு வித்வான் ஒற்றைக் கண் குருடனான வேலைக்காரச் சுப்பன் என்றறிந்ததும், இது கனவோ அன்றி நனவோ என்று திகைத்தனர்.

சுப்பனும் கூறலானான்:—"இந்த ஐயா 'எனக்கு ஒருகண் தானே?" என்று ஒரு விரலைக் காண்பித்தார். 'உனக்கு இரண்டு கண்ணென்று' நான் இரண்டு விரலைக் காண்பித்தேன். 'இரண்டு பேருக்குஞ் சேர்த்து மூன்று கண்ணென்று' மூன்று விரலை இவர் காண்பித்தார். 'அப்படி எல்லாம் பேசினால் மூக்கைக் குத்திவிடுவேன்' என்று முஷ்டியை ஆட்டினேன். 'உங்கள் ஊரிலே இலந்தம்பழம் இருக்கிறதா, என்று பழத்தை விட்டெறிந்தார். நான்

எங்கள் ஊரிலே தோசையிருக்கிறது' என்று தோசையைக் கொடுத்தேன். அவர் மேலே ஏதேனுஞ் செய்திருந்தால் நான் யாரென்று தெரிந்திருப்பார்.''

இந்த வினோத விவாதத்தைக் கேட்டபின் மக்களுக்குள் ஏற்பட்ட பரபரப்பை விவரிக்கமுடியாது. புலவரும் மனம் குன்றினர். அவமானத்தால், கர்வம் நீங்கியது.

மன்னன் இரகசியமாகச் சொன்னது என்ன தெரியுமா? "சுப்பா! நீ நாளைக்கு நல்ல உடைபோட்டுக்கொண்டு சபைக்கு வா. நான் உன்னை ஒரு பெரியவர் முன்னே உட்காரவைக்கிறேன். அவர் செய்கிறதிற்கு எதிராக நீயும் உன்னிஷ்டப்படி செய்'' என்றான். விளைந்தது இது.

க. ரா. அரங்கநாதன்,
முதலாம் வகுப்பு. A பிரிவு.

புத்தக மதிப்புரை

ஒளியும் ஒலியும்

ஆர். கே. விசுவநாதன் எம். ஏ., எழுதியது.

இந்நூலின் ஆசிரியர், 'பௌதிகநூல்' ஒன்று எழுதி, அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தினரால், ஆயிரம் ரூபாய் பரிசளிக்கப்பட்டவர். எனவே அவர் இயற்றியுள்ள 'ஒளியும் ஒலியும்' என்ற நூலின் பண்பைப்பற்றி நாம் ஐயுறவேண்டுவதில்லை. இப்புத்தகத்தில் பௌதிக விஞ்ஞானத்தின் பாற்பட்ட கட்டுரைகள் இருபத்தேழு உள்ளன. இவையெல்லாம் முன்னரே பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவையென்று ஆசிரியர் நன்றியுரையினின்று அறிகிறோம். இப்பொழுது அவை ஒன்றுசேர்த்துத் தொகுக்கப்பட்டு புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் கட்டுரைகளிடை ஒருவகையான தொடர்பு உள்ளது.

சிறந்த விஞ்ஞானிகள் இருவரின் வாழ்க்கை வரலாறுகளின் சுருக்கங்களும் இந்நூலில் உள்ளன. ஒலியின் தன்மையைப்பற்றியும் ஒளியின் தன்மையைப்பற்றியும் ஆராய்ச்சிகள் பல செய்து விஞ்ஞானம் பெருக்கிய பெரியார்களான 'ஹெல்ம் ஹோல்ட்ஸ்', 'மாக்ஸ்வெல்' என்பாரின் பண்புகளைக் கூறும் கட்டுரைகள் இருத்தல் ஏற்றதேயாம். ஒலியும், ஒளியும் ஊசலாட்டத்தையே அடிப்படையாய்க் கொண்டவையென்றும், பொருள்களின் ஈறுன தன்மையும் ஊசலாட்டவியலானதேயென்றும், இந்நூலை முற்றும்படித்தோர் எவரும் தெளிவார். ஆதலின் இந்நூலுக்கு 'ஒளியும் ஒலியும்' என்று ஆசிரியர் தலைப்பிட்டது தகுதியேயென்று ஒப்புக்கொள்வார். விஞ்ஞான ஆராய்ச்சியின் இன்றைய தேர்ந்த முடிவுகள் என ஏற்கப்பட்டுள்ள 'உள் அமைப்பு', 'பிந்துவாதம்' என்ற தத்துவங்களை விளக்கும் கட்டுரைகளும் இந்நூலில் உள்ளன. 'ஒலிப்பதிவு', 'ஒளிப்பதிவு', 'மின்சாரத்தின் உபயோகங்கள்' என்ற விஞ்ஞான விளைவியல்களைப் பற்றிக்கூறும் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. பௌதிக விஞ்ஞானத்தின் பல பகுதிகளைப்பற்றியும் இந்நூலில் கண்ட கட்டுரைகளைப் படிப்பதால் அறியலாம்.

'முயற்சி திருவினையாக்கும்' என்றார் தெய்வப்புலவர். முதுமொழி உண்மையேயென்று இந்நூலின் ஆசிரியர் நிலைநாட்டியுள்ளார். இக்காலத்து விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் எடுத்துரைக்க முடியும் என்று அவர் நிரூபித்துள்ளார். எடுத்துரைக்க இயலாததற்குக் காரணம், தகுந்தகலைச்சொற்கள் இல்லாமையே எனக் கூறுபவர், 'செறிவு' (Density), 'பாகுநிலை' (Viscosity) இன்னோரன்ன சொற்களைக் கவனிப்பாராயின் தமது வாதத்தை நிறுத்த வேண்டியவராவர். அவ்வாறான, எற்றதும் எளிதுமான கலைச் சொற்கள் இந்நூலில் மலிந்து கிடக்கின்றன. நூலுக்கு முகவுரை எழுதியுள்ள சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், இக்கருத்தை ஆணித்தரமாய் எடுத்துக் கூறியுள்ளார்.

நாட்டு மொழிவளர்ச்சியிலும், அறிவுவளர்ச்சியிலும் ஆர்வமுடைய தமிழருக்கு இந்நூல் ஒரு நல் விருந்தாம். அவரெல்லோருடைய அன்பான வரவேற்பிற்கு இது உரித்தானது.

த. பு. த.

WAR AND INSURANCE

War is no excuse for putting off your life insurance idea. This war, like many others of the past must end, sooner or later. To overlook the insurance protection during war time is to overlook your security when you most need it. Don't say "money is safe with me". Your money is always safer in your Insurance policy which covers all risks and which is protected by Society.

::: Do not hesitate or waste time. :::

Policies of Life Assurance issued by us in respect of civilian lives in India, cover the risk of death due to enemy action taken by the Government to combat the enemy and no extra premium is payable in respect of these risks.

Civilian Policyholders are similarly protected without extra charge while performing such civic and benevolent duties as those of A.R.P. worker or Civic Guard.

If the Policyholder's ordinary place of residence in India comes automatically within the range of war-like operation, it will not necessitate payment of any extra premium.

These benefits are applicable to all old policies now in force as well as to policies that are being issued now.

Consult an Indian Mutual Agent.

INDIAN MUTUAL LIFE ASSOCIATION, LTD.,

MADRAS.